

## உலகப் பொதுமறை

அறமென்றும் பொருளென்றும் இன்ப மென்றும்
அடுக்கடுக்காய் வாழ்வியலை வகுத்தே வைத்தாள்
புறவாழ்வின் அகவாழ்வின் சிறப்பு தன்னை
புடம்போட்ட தங்கம்போல் வடித்தே வைத்தான்!
நிறமேழும் ஒன்றான வான வில்லாய்
நெறியனைத்தும் ஒன்றாக்கி நமக்குத் தந்தான்!
மறத்தமிழன் வள்ளுவனே, உலகே போற்றும்
மகத்துவமாய், திருக்குறளாய் வாழு கின்றான்!

முகிழ்வோர்கள் முத்தெடுக்கும் கடலைப் போன்று
முன்னவனாம் வள்ளுவனே குறளைச் செய்தான்!
முகிலறுத்து ஒளிகாட்டும் விடியல் போன்று
முப்பாலில் வாழ்வியலின் வெளிச்சம் தந்தான்!
நெகிழாத இரும்பினையும் நெகிழ வைக்கும்
நிலைகொண்டு அன்பூற்றாய்க் குறளைத் தந்தான்
அகிலத்தின் ஆதார மையம் போன்று
அனைத்துயிரும் ஏற்கின்ற பொதுமை ஆனான்!

ஈரடிக்குள் ஈடில்லாப் பொருளை வைத்தான்
ஏழ்பிறப்பும் சிறக்கின்ற பாதை வைத்தான்!
சீரமைந்த வாழ்வினையே செதுக்கி வைத்தான்
சேமமுறும் வழியினையே எழுத்தில் வைத்தான்!
வேரடர்ந்த மரம்போல செழித்து நிற்க
வேதமென குறளினையே இயற்றி வைத்தான்!
நேரமைந்த பொதுநூலாய் உலகம் ஏற்கும்
நீதிநூலாம் திருக்குறளை ஆக்கி வைத்தான்!

விழிகொண்ட ஒளியாகக் கருத்து கொண்டு
வித்தகனாம் வள்ளுவனே குறளைத் தந்தான்!
மொழிச்சிறப்பை உலகமெல்லாம் உணரு தற்கு
முதல்நூலை வள்ளுவனே தந்து சென்றான்!
அழிவில்லை! குறளுள்ள நொடிகள் மட்டில்
அகிலத்தில் நம்தமிழ்க்கே என்று ரைப்போம்!
மொழிவாழும்! இனம்வாழும்! வள்ளு வன்தன்
முத்தான குறளினாலே என்றே சொல்வோம்!



**பாவரசு.பாரதிசுகுமாரன்**
தமிழ்நாடு அரசின் மகாகவி பாரதியார் விருதாளர்

ISBN 978-81-19053-73-5
9788119053735

திருக்குறள் களஞ்சியம் 2

# திருக்குறள் களஞ்சியம்

## 2
## பொருட்பால்



**133 அதிகாரங்கள் ஆளுமைகள்**



தொகுப்பாசிரியர்
டாக்டர்.வி.ஜி.சந்தோசம்

# திருக்குறள் களஞ்சியம்
# 2

## பொருட்பால்

(133 அதிகாரங்கள் 133 ஆளுமைகள்)

தொகுப்பாசிரியர்

டாக்டர் **வி.ஜி.சந்தோசம்**

**தமிழ்நிலம் பதிப்பகம்**

2/121, பெருமாள் கோயில் தெரு, மணம்பூண்டி,
கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் - 605 759
தொடர்பு எண் : +919444393717.

## நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர் : திருக்குறள் களஞ்சியம்-2
வகை : ஆய்வுக் கட்டுரைகள்
தொகுப்பாசிரியர் : டாக்டர் வி.ஜி.சந்தோசம்
உரிமை : பதிப்பகத்திற்கு
முதல் பதிப்பு : 15.9.2024
அச்சு எழுத்து : 11 புள்ளி
நூலின் அளவு : 1 x 8 டெம்மி
கணினி அச்சுக்கோர்ப்பு : கே.எஸ்.கணேஷன், சென்னை -78.
அச்சிட்டோர் : ரியல் இம்பேக்ட் சொலுஷன்ஸ்
12, கிழக்கு அபிராமபுரம் 3வது தெரு
மைலாப்பூர், சென்னை - 600 004.
வெளியீடு : தமிழ்நிலம் பதிப்பகம்
2/121, பெருமாள் கோவில் தெரு
மணம்பூண்டி - 605 759
கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம்.
ISBN : 978-81-19053-73-5
பக்கங்கள் : 807
விலை : ரூ.1000

●

Name of the Book : Thirukural Kalanjiam - 2
Type : Aayvu Katturaigal
Author : **Dr. V.G.Santhosam**
Rights : Publication
First Edition : 15.9.2024
Size : 1/8 Demmy
Computer Typeset : K.S.Ganeshan, Chennai - 78
Printer : Real Impact Solutions, Chennai-4.
Publisher : Thamizhnilam Pathippagam
2/121, Perumal Koil Street
Manampoondi - 605 759
Kandachipuram Tk, Villupuram.
ISBN : 978-81-19053-73-5
Pages : 807
Rate : Rs.1000

## சமர்ப்பணம்...

உலக

மொழிகளுக்கெல்லாம்

தாய்மொழியான

தமிழ்

அன்னைக்கு...

வள்ளுவர் அதே குறிப்பறிதல்அதிகாரத்தில் இன்பத்துப்பாலில்

கண்ணொடு கண்இனை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

ஒத்த அன்புடன் கண்களோடு கண்கள் கலந்து ஒன்றுபட்டு விடுமானால் வாய்ச்சொற்கள் தேவையற்றுப் போகின்றன என இன்பத்துப் பாலில் குறிப்பிடுவது ஒப்பிட்டு நோக்கின் இன்புறத்தக்கது

மிக மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட மனிதர்கள் பேசும் மொழியான வக்போலி மொழியிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இதன் தனிச்சிறப்பு.

பள்ளிப் பருவத்தில் மனப்பாடப் பாடலுக்காய் திருக்குறளைப் படிப்பதை விடுத்து வாழ்க்கைப் பாடத்திற்காய் படித்து மனதில் நிறுத்தினால் வாழ்வு வசமாகும். காதல் வாழ்வோ வாசமாகும்.

வாழ்த்துக்களுடன்,
முனைவர் **பொன்.குமார்**
இணை இயக்குநர்,
பள்ளிக் கல்வித்துறை.



# பொருளடக்கம்

## அதிகார எண் - கருத்தாளர்


39. இறைமாட்சி
- முனைவர் ஆ.விஜயராணி 21

40. கல்வியின் மாண்புகள்
- முனைவர் த.ராதிகாலட்சுமி 30

41. கல்லாமை
- தமிழ்மணி சுப்ரமணியம் 45

42. கேள்வி
- முனைவர் கா.கண்ணன் 53

43. அறிவுடைமை
- முனைவர் இரா.வனிதா 64

44. குற்றம் கடிதல்
- அருட்பணி ம.வின்சென்ட் அமல்ராஜ் சேச 72

45. பெரியாரைத் துணைக்கோடல்
- முனைவர் இரா.வள்ளி 91

46. சிற்றினம் சேராமை
- திருமதி.மேரி ராஜேஸ்வரி 103

47. தெரிந்து செயல்வகை
- முனைவர் என்.ஐயப்பன் 110

48. வலியறிதல்
- நா.கணேசன் 120

# 40. கல்வியின் மாண்புகள்

முனைவர்.**த.ராதிகாலட்சுமி,**
இணைப்பேராசிரியர்,
ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி,
பொள்ளாச்சி-642001,
அலைபேசி எண் -9994961749

இலக்கியம் என்பது ஒரு நுண்கலை. அவை கருத்திற்கு மட்டுமே புலனாகக் கூடிய கலை. தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்ட காலமாகக் கருதப்பட்ட சங்க மருவிய காலத்தில் தான் கல்வி என்னும் அறிவொளியின் அவசியத்தை உணர்த்த அற இலக்கியங்கள் முனைந்து செயல்பட்டன. அகப்புறச் சிந்தனைகளில் மாற்றம் காண முனைந்தாலும் மனித அகஇருள் அகற்ற உதவும் கல்விச் சிந்தனை மேலோங்கி இருந்த காலம் அறநெறிக் காலமே எனில் அது மிகையாகாது. இக்காலத்தில் தோன்றிய திருக்குறள் மனிதகுலம் உயரக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பெரிதும்; வலியுறுத்தியது. கல்வியின் நோக்கம் என்பது வாழ்க்கை சூழ்நிலைகளுடன் தொடர்புடையது. அரசியல், பொருளாதார மற்றும் சமூக அமைப்புகளுடன் குறிப்பிட்ட நேரத்தில் நிலவும் வாழ்க்கைத் தத்துவத்தைப் பொறுத்து கல்வி தேசத்திற்குத் தேசம் மாறுபடும் தன்மையுடையது. சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலட்சியங்கள் மற்றும் மதிப்புகளில் ஏற்படும் மாற்றங்களால் கல்விமுறையும் மாறுபடும். கடந்தகால வாழ்க்கை முறையினைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியான இலக்கியங்களின் வாயிலாகப் பழந்தமிழர்களின் வாழ்வியல் கூறுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் நோக்கமுடிகிறது. வாழ்க்கை குறித்த கொள்கைகளையும், பழந்தமிழர்கள் பின்பற்றிய வழிமுறைகளையும் ஆராயும்போது அவர்களின் அறிவு முதிர்ச்சியினை உணரமுடிகின்றது. இந்த அறிவு முதிர்ச்சி ஆழ்ந்த



கல்வியறிவினால் மட்டுமே கிட்டியிருக்கக் கூடும். இத்தகைய கல்வியறிவின் சிறப்புக்களைத் திருக்குறளின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கல்வி:**

உலகில் தோன்றிய மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ அடிப்படைக் காரணியாக விளங்குவது கல்வி. கல்வி என்னும் சொல்லுக்கு கல்லுதல் என்றும், தோண்டுதல் என்றும் பொருள் குறிப்பிடுவர். கல்வி என்ற தமிழ்ச்சொல்லின் வேர்ச்சொல் 'கல்' என்பதாகும். கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச்சொல் Education என்பதாகும். இச்சொல் Educatio / Educatum என்ற இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். Educatio என்பதற்கு வளர்த்தல் என்றும், Educatum என்பதற்கு கற்பித்தல் என்றும் பொருள். Educo என்ற அடிப்படைச் சொல்லிற்கு இணைச்சொற்களாக வெளிக்கொணரல், முன்னேற்றிவிடல், உயர்த்திவிடல் போன்ற பொருட்களைக் குறிப்பிடலாம். இதனடிப்படையில் கல்வி என்பது தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களின் உள்ளார்ந்த தகுதிகளை வெளிக்கொண்டு வருதல் என வரையறுக்கலாம்.

''அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, உறுதி, ஊதியம், ஏதி, கரணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை''

(கௌரா தமிழ் அகராதி -ப.233)

என்று கௌரா தமிழ் அகராதி கல்விக்கு விளக்கமளிக்கிறது. பழந்தமிழரின் கல்வி வெறும் மொழிக்கல்வியோ, இலக்கியக் கல்வியோ அல்ல. வாழ்க்கைக் கல்வியாக திகழ்ந்ததை அறியமுடிகிறது. கல்வி வாய்வழியாகக் கற்பிக்கப்பட்டதால் மன உறுதியுடன் கற்பவருக்குத் தக்க மாற்றமுற்றுச் செயல்பட்டதையும் உணர முடிகிறது. தனிமனித வாழ்வையும், நாட்டின் முன்னேற்றத்தையும் உயர்த்துவது கல்வி. அத்தகைய கல்வி மனிதனின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறியாமை இருளை அகற்றுகிறது.

பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கல்வி குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

'' ஓதல், பகையே தூதிவை பிரிவே''

(இளம்பூரணர் உரை -தொல்காப்பியம்- அகத்திணையியல். நூ.எ27)

என்று பிரிவின் வகைகளைக் குறிப்பிடுவதுடன் ஓதலும், தூதும் உயர்ந்தோருக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளது. கல்வியின் பொருட்டு ஒருவன் பிரியும் காலம் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும் என்பதும் தொல்காப்பியத்தின் வரையறையாகும். மேலும் எண்வகை மெய்ப்பாட்டில் ஒருவருக்கு கல்வியின் பொருட்டு பெருமிதம் தோன்றும் என்றும் கூறப்பட்டுள்ளது. இத்தகையக் கல்வியின் மாண்புகளைத் திருவள்ளுவர் குறிப்பிட்ட விதத்தை ஆராயலாம்.

**கல்வி கற்கும் முறை:**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் : 391)

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருட்களை எடுத்துரைக்கும் நூல்களைக் கற்க வேண்டும். அதைத் தவிர்த்து வாழ்வின் மெய்ப்பொருளில் மயக்கத்தை ஏற்படுத்தும் நூல்களைக் கற்கலாகாது என்ற உட்பொருளையும் கற்க என்ற சொல் உணர்த்துகிறது. ஒரு செடியில் இலை தளிர்ப்பதைப் போல் இவ்வுலகில் மனிதன் பிறப்பெடுக்கிறான். சில காலத்தில் இலை பழுத்து சருகாகி உதிர்வதைப்போல் மரணம் சம்பவிக்கிறது. இந்த வாழ்க்கை என்ற இடைப்பட்ட காலத்தில் மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்து வீடுபேறு அடைவதே இன்றியமையாதது. அத்தகைய மெய்ப்பொருளை அறிவதற்கு மனிதன் பல நல்ல நூல்களைக் கற்கவேண்டும். இவ்வுலகில் பிறப்பெடுத்த மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும் என்பதற்காகவே திருவள்ளுவர் கற்க என்று ஆணையிடுவதாக கருதத் தோன்றுகிறது.

மெய்ப்பொருள் உணர்த்தும் நூல்களை நல்ல ஆசானின் துணையோடு முறையாகக் கற்கவேண்டும். குற்றமற, ஐயம் திரிபறத் தெளிவாக அறிதல் வேண்டும். பிறிதொருவரின் ஐயத்தை நீக்குமளவிற்கு தெளிவு பிறத்தல் அவசியம். அதாவது



இத்தகைய கல்வி தரும் அறிவு சிறப்புடையதாக விளங்கும். இவ்வறிவினால் அகந்தையை ஏற்படுத்திக் கொள்ளாமல் நூல்கள் சொன்ன அறத்தின்படி வாழ்வதே மெய்ப்பொருள் அறிந்து வீடுபேறு அடைய உதவும். இல்லற நெறிகளைப் பின்பற்றி வந்த செல்வத்தை அறம், பொருள், இன்பங்களின் வழியே விடுதல். அதாவது மெய்ப்பொருள் அறிந்து ஆசையைத் துறந்து பிறவியற்ற வீடுபேறு அடையலாம். வாழ்விற்கான காலம் குறைவு என்பதால் நூல்கள் கூறிய வழியில் நின்று சிறப்புற வாழ்ந்து வீடுபேற்றை மேற்கொள்வீர் என இத்திருக்குறள் வலியுறுத்துகிறது.

நன்மை பயக்கும் நூல்களைப் பிழையின்றி, ஐயமற தெளிவாகக் கற்று பின் நூல்கள் உரைத்த நல்வழியை மறவாமல்; பின்பற்றி உயிர்கள் வீடுபேறு அடைவதற்குக் கல்வி இன்றிமையாதது. கல்வி கற்கும் முறையை எடுத்துரைத்த வள்ளுவர் அடுத்த குறளில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த முனைந்துள்ளார்.

**எண்ணும் எழுத்தும்:**

எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் : 392)

மனிதர்கள் எண் என்றும், எழுத்து என்றும் அழைக்கும் இரு வகையான கலைகளையும் இவ்வுலகில் சிறப்பாக வாழும் மக்கள் உயிர்க்குக் கண் என்றுரைப்பர் அறிவோர். எண் என்றால் எண்ணிக்கை, எண்ணம், கணிதம், கணக்கிடுதல், தருக்கம் போன்ற பல பொருட்களிலும், எழுத்து என்றால் கல்வி, கையெழுத்து, இலக்கணம் போன்ற பொருட்களிலும் கையாளலாம். இங்கு எண் என்ற சொல்லைக் குறித்து ஆராயும்போது மனிதன் தம் அன்றாட வாழ்வில் மேற்கொள்ளும் அனைத்து வினைகளிலும் உதாரணமாகச் சிற்பக்கலை, சித்திரக்கலை, சமையல்முறை, கட்டடக்கலை, விவசாயம் போன்றவற்றில் ஏதோ ஒரு கணக்கீட்டு முறையைப் பின்பற்றுகிறான். இவ்வுலகில் எழுத்தறியாத மனிதன் உண்டே தவிர எண் அறியாத மனிதன் இல்லை எனலாம். அதனால் தான் வள்ளுவர் எண்ணை முதலில் குறிப்பிட்டுள்ளார். அதே போல்

தருக்கம் என்ற பொருளிலும் எண்ணைக் கையாளலாம். ஒரு கருத்தில் தருக்கம் பிறந்தால் தெளிவு உண்டாகும். தெளிவு பெறுவதே கல்வியின் குறிக்கோள். இதையே வள்ளுவர்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' ( குறள் எண்-355)

என்று செந்நாப்புலவர் முன்பே குறிப்பிட்டுள்ளார். எழுத்தும் மனிதன் கற்றிருத்தல் அவசியம். எழுத்தினை அறிந்தவன் நூல்களைக் கற்றுத் தனக்குள்ளேயோ அல்லது பிறரிடமோ தருக்கமுறையில் ஈடுபடின் அங்கு தெளிவு பிறக்கும். எழுத்தை அறியாதவன் பிறரைச் சார்ந்திருக்கும் சூழல் ஏற்படும். எனவே எண்ணையும், எழுத்தையும் அறிதல் அவசியமாகும். உடலில் வேறு உறுப்புக்களைக் குறிப்பிடாமல் கண்ணைக் குறிப்பிடுவதற்கு காரணம் கண்ணால் மட்டுமே வெளியுலகத்தைக் கண்டு அறிவு பெறவியலும். மேலும் கை,கால் போன்ற உடல் உறுப்புக்கள் செயல்படுவதைக் கூட கண்கொண்டே நோக்கமுடியும். கண்ணே வழிகாட்டியாக செயல்படமுடியும். அதனால் வள்ளுவர் மற்ற உறுப்புக்களுக்கு முக்கியத்துவம் தராமல் கண்ணைக் கூறுகிறார் எனலாம். உலகில் பிறந்த உயிர்கள் எல்லாம் வாழ்கின்றன. ஆனால் செழிப்பாக, மகிழ்ச்சியாக வாழ்தலே சிறப்பு. அத்தகையவர்களுக்கு எண்ணும், எழுத்தும் உயிராகத் திகழ்கின்றன எனப் புலப்படுத்துகிறார்.

''கண்ணுங்காற் கண்ணும் கணிதம் எழுத்து''

(ஞா.மாணிக்கவாசகன் -
உரையாசிரியர்,சிறுபஞ்சமூலம் பா.எ-86)

என சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது. திருநாவுக்கரசரும்,

''எண்ணும் எழுத்தும் குறியுமறிபவர்''

(புலவர்.பிரா.நடராசன்-
உரையாசிரியர்,தேவாரம் - பா.எ-36)

எனக் கூறியுள்ளார். அந்தககக்கவி வீரராகவ முதலியாருக்குக் கண்கள் இல்லையாயினும் கேட்டறியும் ஆர்வத்தால் இலக்கண, இலக்கியங்களைக் கற்று பாடல் இயற்றும் புலமையும் பெற்றார். ''ஏடாயிரங் கோடி எழுதாது தன்மனத்து எழுதிப் படித்த விரகர்''



என்றழைக்கப்பட்டவர் பயணத்தில் தனக்கென வைத்திருந்த கட்டுச்சோற்றை நாய் உண்டதை பிறரால் அறிந்து,

சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராளும் நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கொண்டு
நாராயணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

(ஜெகவீர பாண்டியனார் - திருக்குறட் குமரேச வெண்பா
(தொகுதி-5),ப.41)

என நகைச்சுவையோடு கவிச்சுவையையும் வெளிப் படுத்துகிறார். இவருக்குக் கண்ணில்லையாயினும் இவர் கற்ற எண்ணும் எழுத்துமே கண்களாகத் திகழ்ந்து புகழ்பெற்றதை அறியமுடிகிறது. அடுத்த குறளிலும் திருவள்ளுவர் கண்ணையே ஒப்புமைப்படுத்துகிறார்.

**கற்றோரும்,கல்லாதவரும்:**

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள் : 393)

மாந்தர்கள்; அனைவருக்கும் கண்கள் உண்டு. அறிவைக் குறிக்கும் கண்ணுடையோர்க்கு அதாவது நூல் பல கற்றுணர்ந்த தெளிவுடைய சான்றோருக்கு இருப்பது மட்டுமே கண்ணாகும். மற்றவர்களுக்கு அதாவது கல்வியறிவு அற்றவர்களுக்கு முகத்தில் இருப்பது கண்ணல்ல. அது வெறும் புண்ணே. புண் என்பது காயத்தை மட்டும் குறிப்பிடவில்லை. மனதில் ஏற்பட்ட நோயையும் குறிப்பிடுகிறது எனலாம். இங்கு வள்ளுவர் கற்றலை மட்டும் வலியுறுத்தவில்லை. கற்றோர் என்றும் கற்றோராய்ச் செயல்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார். கற்றோர் என்பவர் உலக நிகழ்ச்சிகளைக் கண்டு அதன் காரண காரியங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்களாவர். இவர்களின் வாழ்க்கை கல்லாதவர்களின் வாழ்க்கையை விடச் சிறப்புற்றது என்பதில் ஐயமில்லை. கண்ணுடைய கற்றோர் சூழலறிந்து பிறர் நலத்திற்காக, உலகிற்காகப் பாடுபடுபவர்களாய்ச் செயல்படவேண்டும் என்ற வள்ளுவரின் நோக்கு புலனாகிறது.

கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்.

(நச்சினார்க்கினியர் உரை-கலித்தொகை பா.எ-130)

என்று கலித்தொகையின் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

இரட்டையர்களில் முடவர் மேலிருந்து வழிகாட்ட குருடர் அவரைச் சுமந்து செல்வது வழக்கம். முடவர் தான் கண்ட காட்சிகளை வர்ணித்து கவிபாட அக்குறிப்பறிந்து குருடர் பின்பாதியைப் பாடுவார். இதனால் ‘பண்பாய கலம்பகத்துக்கு இரட்டையர்’ என புகழ்பெற்றனர். கற்றோரின் அறிவே இங்கு கண்ணாகத் திகழ்வதை அறியமுடிகிறது. பாடலிபுரத்து வேந்தன் மகன் சந்தனன் புண்களாக இருந்ததை உணர முடிகிறது. கண்ணுடையோராயினும் கற்காதவருக்கு அவை புண்களாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## புலவரின் தொழில்:

உவப்பத் தலைக் கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (குறள் : 394)

உள்ளக் கருத்தில் ஒன்றாகி தாங்கள் கற்ற நூல்கள் குறித்து மகிழ்ந்து உரையாடி பிரிய முற்படும்போது இனி இவரை எப்போது எவ்வாறு சந்திக்கப் போகிறோம் என்று அவர்கள் எண்ணும்படி பிரிவது புலவரின் தொழிலாகும். ஒருவரைச் சந்திக்கும் போது மகிழ்தலும், பிரியும்போது தம்மைக் குறித்து அவர் நினைந்து உருகுமாறு செய்தலுமே கற்றறிந்தவரின் தொழிலாகும்.

நற்றா மரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கதை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை உசுக்கும் பிணம்’’
*( ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரையாசிரியர்- மூதுரை.பா.எ-27)*

நற்றாமரைக் குளத்தில் நல்ல அன்னப்பறவை வந்து சேருவது போல கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்னும் ஔவையாரின் பாடல் இங்கு நினைவுகூறத்தக்கது.

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
உற்ற துரையாதார் உள்கரந்து பாம்புரையும்.
*(தமிழறிஞர் சாமி உரையாசிரியர் -நான்மணிக்கடிகை. பா.எ-58)*



என்று நான்மணிக்கடிகையும் கல்வியறிவையுடையவர்களை விரும்பிச் சேர்பவர்களும் கற்றவர்களாகவே இருப்பர் என்றுரைக்கிறது.

சங்ககாலப் புலவர் கோவூர்க்கிழார் சோழநாட்டில் அமிர்தநாதன் என்பவருக்கு மகனாய்ப் பிறந்தார். கல்விக்கு அறிவும், அறிவுக்கு ஒழுக்கமும் பயனாம் என்பதற்கிணங்க மாந்தருக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்தார். நலங்கிள்ளியின் அவையில் வானுறு மதியாய் பெரும்புலமை பெற்று விளங்கினார். பெருங்கிள்ளிக்கும் , நலங்கிள்ளிக்கும் இடையில் ஏற்பட்ட பெரும்பகையை ஒழித்து இருவருக்கும் இடையில் உவகையைத் தோற்றுவித்தார். இப்புலவரைக் கண்டவர் மீண்டும் எப்போது சந்திப்போம் என ஏங்கும்படியாகத் திகழ்ந்தார். புலவர் பயணம் செய்ய அவரைக் காணாத நலங்கிள்ளி பிரிந்திருக்க இயலாதவனாய் விரைந்து சென்று தம் நாட்டிற்கு புலவரைக் கொணர்ந்தான். சிறந்த புலமையும், நிறைந்த மொழிகளும் பெற்ற இவரைக் கண்டு உரையாடியவர் பின்பு என்றும் மறவாதவராய் அன்பு செய்தனர். இவ்வாறு உவப்பக் கூடி உள்ளப்பிரிதலே புலவரின் தொழில் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது.

## யாசித்தாகினும் கற்றல் நன்று:

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். (குறள் : 395)

செல்வந்தர்கள் முன்பும், கொடையாளர்கள் முன்பும் தம் தேவை கருதி யாசகம் புரியும் வறியவர்கள் போல அறிவிற் சிறந்த சான்றோர்களிடம் கற்க விரும்பி, அவர்களிடம் தாழ்ந்து பணிந்து நின்று கற்பவரே கற்றார் எனப்படுவர். அதற்கு மாறாக விரும்பியும், பணிந்தும் கற்காதவர்கள் கீழோர் ஆவர். கற்காதவர்கள் யாசித்தாவது கற்று தம் அறியாமையை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். அப்படி இல்லையாயின் அறியாமை என்ற இருளில் சிக்கி துன்புறும் கீழோராகவே கருதப்படுவர். குருவிடம் இருந்து முறையாகக் கல்வி கற்று அறிவுபெற்றோரே தனக்குள் தருக்கம் செய்து தற்கல்வியைப் பெறமுடியும். அதாவது தற்கல்விக்கும், பொதுக்கல்வியே அடிப்படை. அதைக் கற்க தாழ்வதே சிறந்தது என்பதே கருத்து.

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப்புகினும் கற்கை நன்றே' என்ற ஔவையாரின் கருத்தை இத்திருக்குறளில் ஒப்பு நோக்கலாம்.

வியாச பாரதத்தில் உதங்கன் என்பவன் பயிலவர் என்னும் முனிவரிடம் கீழ்ப்பணிந்து கல்வி கற்றான். ஒழு நாள் விறகுச்சுமையின் போது அவன் சடையில் சிக்கிய விறகால் அது அறுபட்டு உதிரம் வெளியேறியது. அவனுடைய பணிவினால் குரு தம் மகளையே திருமணம் புரிவித்தார். யதுகுல மன்னனாகிய கண்ணன் தம் இளமைப்பருவத்தில் சாந்தீபனியிடம் கீழ்ப்படிந்து, விறகு சுமந்து கல்வி கற்றார். இவர்கள் கல்வி மேல் கொண்ட ஈடுபாட்டினால் குருவிடம் தாழ்ந்து கற்றதனால் பின்பு உயர்நிலையை அடைந்ததைக் காணமுடிகிறது.

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே''

(நச்சினார்க்கினியர் உரையாசிரியர்,
புறநானூறு பா.எ- 183 )

என்ற புறநானூற்றின் கருத்தும் நினைவு கூறத்தக்கது.

## நீரும், அறிவும்:

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (குறள் : 396)

ஒரு கிணற்றில் தோண்டத் தோண்ட நீர் சுரப்பதைப் போல மனிதன் கற்கும் நூல்களின் அளவைப் பொறுத்தே அறிவும் பெருகும். ஒரு மாணவன் நூலின் கருத்தை ஆசிரியரிடம் கற்கும் போது அவனுடைய ஆர்வம், உழைப்பு மிகின் கற்கும் திறனும், அறிவும் மிகும். இவற்றில் மாறுபடின் நுனிப்புல் மேய்ந்தது போல் பயனற்றதாகி விடும். பொதுக்கல்வி எனும் அஸ்திவாரத்தின் மேல் கட்டப்படும் கட்டடமே தற்கல்வி. அந்நிலையை அடைய கற்றலின் அளவு இன்றிமையாதது. கிணற்றைத் தோண்டும்போது மண் சரிவதற்கும் வாய்ப்புண்டு. அப்போது நீர் கலங்கும். நாளடைவில் நாம் கற்ற நூல்களின் கருத்தில் மயக்கம் தோன்றும். மறதி ஏற்படும். அப்போது மண்ணை அப்புறப்படுத்தினால் மட்டுமே நீரைப் பயன்படுத்த இயலும். அதைப் போல் மீண்டும் மீண்டும் நூல்களைத் தொடர்ந்து கற்றாலே அறிவு பெருகும்.



தூறும் என்ற சொல் ஆழமாகும் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. மணற்கேணியைத் தோண்டத் தோண்ட ஆழமாவதைப் போன்று பல்வேறு வகையான நூல்களைத் தொடர்ந்து கற்க அறிவும் ஆழமாகும்.

வள்ளுவர் பொதுவாகக் கேணி எனக் கூறாமல் மணற்கேணி என்றதற்குக் காரணம் அதிக நீர் வேண்டி ஆழமாக இதைத் தோண்டினால் பக்கவாட்டிலுள்ள மண் சரியும். இதனால் பக்கவாட்டிலுள்ள மண்ணை அகழ்ந்து விட்டு அகல,ஆழத்தின் விகிதத்தைப் பேணித் தோண்டுதல் அவசியம். இது கிணற்றினைப் போன்று செங்குத்தாக இல்லாமல் அகலமாகவும், ஆழமாகவும் சற்றே அரை நீள்கோள வடிவில் காணப்படும். நீரை முகக்கும்போது நீர் சரிந்தால் மண்ணை அப்புறப்படுத்திவிட்டு மீண்டும் தேவையான அளவு அதிகமான நீரினை எடுத்துக் கொள்ளமுடியும். இதைத் தோண்டுவதற்கு எக்கருவியின் உதவியுமின்றி தனிமனிதனே போதுமானவன். இதனால் தான் வள்ளுவர் நிலக்கேணியைக் குறிப்பிடாமல் மணற்கேணியைக் குறிப்பிட்டார் என எண்ணத்தோன்றுகிறது. கற்றல் என்பது ஆழமானதாக மட்டும் இல்லாமல் விரிவாகவும் இருத்தல் வேண்டும் என விருப்பப்பட்டே இச்சொல்லைக் கையாண்டார் எனலாம். நீர் எடுக்க எடுக்க ஊறுவதைப் போல நூல் கற்கக் கற்க அறிவும் வளர்ந்து கொண்டேயிருக்கும். கசடறக் கற்க இம்முறையே சிறந்ததாகும். மேலும் 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்பதற்கிணங்க மணற்கேணியில் நீரைத் தோண்டத் தோண்ட எடுத்துக் கொள்ளலாமே தவிர அது என்றும் கடல் போன்று பரப்பளவில் மாறாது. நாம் கற்றலின் மூலம் சிறிது சிறிதாக அறிவைப் பெறமுடியுமே தவிர அளவில் கடல் போல அனைத்தையும் படித்து முடித்துவிட்டதாக உரைக்க முடியாது.

'' நூல்வரைத் தொடந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரும் உணர்வே''

(டாக்டர்.பூவண்ணன் உரையாசிரியர்-
கம்பராமாயணம் - நகரப்.பா.எ-8)

என்று கம்பர் கற்றனைத்தூறும் அறிவையே குறிப்பிடுகிறார். கற்ற கருத்துக்கள் மனதிற்குள் சென்று அறிவு உள்ளிருந்து வரவேண்டும். அறிவு என்றும் வற்றாது. ஊற்று போல்

அடுத்தவருடன் பகிரப் பகிர அதிகமாகும். கல்வி என்பது திணிப்பது அல்ல என்பதையே திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

### கற்றவருக்கான சிறப்பு:

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (குறள் : 397)

'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற பழமொழியை இத்திருக்குறளில் உற்றுநோக்கலாம். நூல்களைக் கற்ற ஒருவன் எங்குச் செல்லினும் அது அவனுடைய பிறப்பிடமாகவே மாறிவிடும். ஏனெனில் கற்றோரை அனைவரும் ஏற்பர். இத்தகைய சிறப்புமிக்க கல்வியைக் கல் என திருவள்ளுவர் உரைக்கிறார்.

மூதுரையில் மன்னடினையும் மாசில்லாது கற்றோனையும் சீர்தூக்கி நோக்கினால் கற்றவனே சிறப்புமிகுந்தவன் ஆவான். மன்னனுக்கு தம் தேசத்தை விட்டு வெளியேறினால் மதிப்பில்லை. ஆனால் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற கருத்து இடம்பெற்றுள்ளது. மேலும்,

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்"

(புலியூர்க்கேசிகன் உரை-பழமொழி நானூறு பா.எ-55)

எனப் பழமொழி நானூறு கற்றோர் பெறும் மதிப்பை எடுத்துரைக்கிறது. இதனையே புறநானூறு,

"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"

(நச்சினார்க்கினியர்
உரையாசிரியர்-புறநானூறு பா.எ-206)

என்றுரைக்கிறது. மேலும்,

" யாதும் ஊரே யாவரும் கேளிர்"

(நச்சினார்க்கினியர் உரையாசிரியர் - புறநானூறு பா.எ.192)

என்று கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் நினைவிற் கொள்ளத்தக்கது. ஐந்து வயது வரை வாய் பேச முடியாதிருந்த



குமரகுருபரர் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் திறம் பெற்று கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம் போன்ற பல நூல்களை இயற்றினார். மதுரை, சிதம்பரம், காசிக்குச் சென்று முகம்மதிய அரசனை தம் கல்வித்திறத்தால் தன்வயப்படுத்தி இந்துஸ்தான் மொழியையும் கற்றார். கற்றோரின் சிறப்பிற்கு குமரகுருபரர் ஓர் உதாரணமாவார்.

### பிறவிதோறும் கல்வியின் பயன்:

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் : 398)

ஒருவன் தன்னுடைய பிறப்பில் கற்ற கல்வி அப்பிறவியில் மட்டும் பயன் தராமல் மேலும் பிறக்கப்போகும் ஏழு பிறவிக்கும் பயன்தரும். இத்தகைய சிறப்புமிக்க கல்வியைக் கற்று பயன்பெறுங்கள் என தெய்வப்புலவர் குறிப்பிடுகிறார்.

"வாழ்வு என்பது ஒருதடவை பிறந்து முடிவது அல்ல. அது ஓர் தொடர்சங்கிலி. நெற்பயிர்கள் எப்படி தொடர்ந்து வளர்ந்து மடிந்து மறுபடியும் வளர்ந்து தொடர்கிறதோ அதுப் போன்றது."

மசானபு ஃபுகோகா என்பவர் இயற்றிய 'ஒற்றை வைக்கோல் புரட்சி' என்ற நூலில் இடம்பெற்ற இக்கருத்து கல்விக்கும் பொருத்தமானதாகவுள்ளது. முற்பிறப்பில் தான் கற்ற கல்வி பிற்பிறப்பில் அனைத்து நூல்களையும் இளமையிலேயே எளிதில் உணருமாறு அவனுக்கு அது உதவிசெய்யும். சைவ சமயக் குரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தரை ஒரு எடுத்துக்காட்டாய் கொள்ளலாம்.

### இன்பம் தரும் செல்வம் :

தாமின் புறுவது உலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (குறள் : 399)

கற்றவர்கள் என்பவர் பல நூல்களைக் கற்றறிந்து அதன் மெய்ப்பொருளைக் கண்டவர். அறியாமையைக் களைந்து தான் பெற்ற பயனை, உண்மையை நன்கறிந்த கற்றோர் அதனைப் பிறருக்கும் தெரிவித்து நன்மையடையச் செய்வர். அதாவது தானும் இன்பமடைந்து பிறரையும் இன்ப நெறிக்குள் செலுத்துவர். இத்தகைய நலம் கண்டோர் மேலும் மேலும்

கற்கவே விரும்புவர். மெய்யாக கற்றறிந்தோர் செல்வம், அதிகாரம் என எதையும் விரும்பாமல் கல்வியையே விரும்பி நிற்பர்.

பாண்டியன் புலவரை நோக்கி 'கோடி பொன் பெறும்படியாக ஒரு பாடலைப் பாடுக' என புலவர்களிடம் ஆணையிட அவர்கள் பாடவியலாது தவித்தனர். அப்போது ஔவையார் அடி ஒன்று கோடி பொன் பெறும்படி பாடுவேன் எனப் பாடினார்.

மதியாதார் வாசல் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்.
கோடான கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

(புலியூர்க்கேசிகன் உரை - ஔவையார் தனிப்பாடல்கள் - பா.எ.42)

அரசன் மகிழ்ந்து பரிசிலைத் தர ஔவையார் மறுத்தார். பொன், பொருளை விரும்பாது தான் கற்ற கல்வியின் மேல் காமுற்று விரும்பிய இடங்களுக்குச் சென்று பாடலைப் பாடி மகிழ்ந்ததை இத்திருக்குறளோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

## அழியாத செல்வம் :

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. (குறள் : 400)

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. பொன், மணி, பொருள் போன்றவை அழியக் கூடியவை. பிறரால் கவரத்தக்கவை. ஆனால் கல்வி கொடுக்க, கொடுக்கக் குறையாததாய் என்றும் அழியாததாய் எழுமையினும் ஏமாப்புடையதாய்த் திகழ்வதால் அறிவுடையோர் கல்வி ஒன்றையே அழிவில்லாத செல்வமாகக் கருதுவர்.

பொய்ப்பொருள் பிறகள் பொன்னாம் புகழுமாந் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை யென்றான்.

(உ.வே.சாமிநாதையர் உரை -சீவகசிந்தாமணி.1595)

எனக் கைப்பொருளைக் கொடுத்து கற்ற கல்வி கற்றபின் கண்ணாக விளங்கும். மெய்ப்பொருளை உணர்த்தி என்றும் துணையாக, அழியாத செல்வமாக கல்வி விளங்கும் என்று சீவகசிந்தாமணி கூறுவது நினைவிற் கொள்ளத்தக்கது.



## தொகுப்புரை:

நான்கு உறுதிப் பொருட்களையும் அளித்து இசைபட வாழவைக்கும் கல்வியை வழுவறக் கற்றலும் அதன்படி நெறிநின்று ஒழுகுவதுமே பிறவியின் பயனாகும். எண்ணும் எழுத்தும் உயிர்களுக்குக் கண்ணாய் விளங்குகிறது. வாழ்வின் உண்மைப்பொருளை உணர்த்தி தெளிவைத் தருகிறது. கற்றவரே கண்களையுடையவர். கல்லாதவர் புண்களையுடைவராவர். ஏனெனில் கற்றவர் இவ்வுலகினருக்கு வழிகாட்டியாய் பிறர் நலத்தில் ஈடுபாடுடையவராய்த் திகழ்கின்றனர். உலகம் இன்புற ஒழுகலே புலவரின் தொழிலாகும். கற்றவரைச் சந்தித்து அளவளாவியவர் மீண்டும் இவரை எப்போது சந்திப்போம் என ஏங்கச் செய்தலே சிறப்பாகும். எவ்வகையாயினும் கற்றவரே மேலோர். கல்லாதவர் கடையரேயாவர். பொதுக்கல்வியில் வெற்றிபெறும் மனிதனே தனக்குள் தருக்கம் செய்து தற்கல்வியைப் பெற முடியும். நீரளவே ஆகுமாம் நீராம்பல். தான் கற்ற நூலின் அளவுக்கேற்றவாறு மக்கட்கு நுண்ணறிவு ஏற்படும். மணற்கேணியை அகழ்ந்து, ஆழ்ந்து எப்போது வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் நீரினை எடுப்பது போல நூலைக் கற்க கற்க அறிவும் பெருகும். கல்வி கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பினைப் பெற்றுத்தரும். ஒரு பிறவியில் கற்ற கல்வி ஒருவனுக்கு எழுபிறவியிலும் துணைநிற்கும். பொன், பொருளை விரும்பாது கற்றோர் கல்வி ஒன்றையே விரும்புவர். கல்வியே என்றும் அழியாத செல்வம். அறிவைப் பெற்ற மனிதனின் வாழ்வு மென்மேலும் மேம்படும். திருவள்ளுவர் கையாண்ட சொற்கள் ஒவ்வொன்றுக்கும் காரண காரியத் தொடர்பு இருப்பதையும் அதன் ஆழத்தையும் உணரும்போது உலகப் பொதுமறையின் பெருமையினை உணரமுடிகிறது. பிறப்பெடுக்கும் உயிர்கட்கெல்லாம் தலையாயது கல்வி. எப்பொருள் கொடுத்தும் கல்வி கற்கும் மாந்தர் அறிவில் தெளிவுபெற்று தானும் முன்னேறி சமூகத்தையும் வழிநடத்துவர் என்பது மிகையாகாது. இத்தகைய கல்வியின் மகத்துவத்தை எடுத்துரைத்த தெய்வப்புலவர் திருவள்ளுவரைத் தலைவணங்குவதில் தமிழராய்ப் பெருமிதம் கொள்வோம்.

**முதன்மை நூல்**

1.பரிமேலழகர் உரை -திருக்குறள்

**துணைநூல்கள்**


1. இளம்பூரணர் உரை -தொல்காப்பியம்
2. சாமி. தமிழறிஞர் உரையாசிரியர் -நான்மணிக்கடிகை.
3. உ.வே.சாமிநாதையர் உரை -சீவகசிந்தாமணி
4. நச்சினார்க்கினியர் உரை-கலித்தொகை
5. நச்சினார்க்கினியர் உரையாசிரியர்-புறநானூறு
6. நடராசன்.பி.ரா.புலவர்- உரையாசிரியர்,தேவாரம்
7. சி.பார்த்திபன் - ஆய்வுநோக்கில் திருக்குறள்
8. புலியூர்க்கேசிகன் உரை- ஔவையார் தனிப்பாடல்கள்
9. புலியூர்க்கேசிகன் உரை-பழமொழி நானூறு
10. டாக்டர்.பூவண்ணன் உரையாசிரியர்-கம்பராமாயணம்
11. வ.சுப.மாணிக்கம் - மூதறிஞர் - வள்ளுவம்
12. ஞா.மாணிக்கவாசகன் - உரையாசிரியர்,சிறுபஞ்சமூலம்
13. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை- மூதுரை
14. ஜெகவீர பாண்டியனார் - திருக்குறட் குமரேச வெண்பா


★★★



# 41. கல்லாமை


தமிழ்மணி.**சுப்ரமணியம்,**
மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் (ஓய்வு),
கருவூர் - 639004.


எப்பாலும் ஏத்துவம் இன்பம் பொருள்அறமா
முப்பாலும் ஆயிரத்து முந்நூற்று முப்பதா
ஓரடி முக்கால் உரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே. பழம்பாடல்

''ஒவ்வொருவனும் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றை எல்லாம் சிறந்த பண்பாட்டோடும், மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில், இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுற வில்லை என்று சொல்லலாம்'' என்பார் தமிழறிஞர் நெ.து.சுந்தரவடிவேலு.

## திருக்குறள் பெயரும் வைப்பு முறையும்:

உலகியலை உரைக்க வந்த வள்ளுவர் தமது நூலை மூன்று கூறாகப் பகுத்து, அறம் பொருள் இன்பங்களை உணர்த்தி; முப்பால் எனப் பெயருமிட்டார். முப்பாலின் உட்பிரிவாக, இயல் அதிகாரப் பகுப்பும், அதிகாரத்திற்கு பத்துக் குறட்பாக்களும் வகுத்துள்ள முறை திட்டமிட்டுச் செய்தது என்பதற்கு ஐயமின்று'' என்கிறார் மு. சண்முகம்பிள்ளை.

நாவலர் சரிதை ''அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்

திறமுரைத் தானும் புலவன்'' என்கிறது. திருவள்ளுவ மாலையும் முப்பால் என்றே பகர்கிறது.